



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ஸ்கந்தபுரம் ஸ்ரீ முருகன் ஆலய
# திருஊஞ்சல் பாடல்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

வேலுருவந் தாங்கி வினைதீர்க்க வேகமொடு
பாலமுருகன் பேர்சடையான் புதல்வனாம்
கால்கொண்டு கந்தபுரக் கிராமத்தில் குடிகொண்ட
ஞானக் குமரனவன் மீதூஞ்சல் நாம்பாடச்
சோலைக் கரும்பாலைக் கணபதிப் பிள்ளையொடு
ஆலமரத்தருகமர்ந்த அக்கராயனைங்கரனும்
சூழத்தலங் கொண்டு சொரியும் அருள்சிறக்கச்
சொல்லும் கவிதை சிறந்திடக் காப்பதாமே.

## நூல்

முக்கண் முதல்வனருட்கருணை வடமொன்றாக
மோகங்களைந்து தரும் மோட்சமொரு வடமாக
பக்கம் பாராது பாவமளி வடமொன்றாக
எக்கணமும் மக்கள் துயர் களையும் வடமாக
பக்தியுடன் பாவப்பிணி தீர்க்கும் பீடமாக
சித்திதரச் சிறுவேகமாயாடீரூஞ்சல்
முத்தாக நெல் விளையும் மேலூராம் கந்தபுரக்
கந்தவேற் பெருமாளே ஆடீரூஞ்சல் 01

இலங்கை மணித்திருநாட்டில் எழில்மிகு நித்திலமாம்
தலங்கள் பல நிறைந்த தனித்துவக் குடாநாடாம்
வளங்கள் செறிந்திலங்கும் யாழ்ப்பாண தேசம் வாழ்
களங்கமற்ற கனியதமிழ் கழறுகின்ற குடிமக்கள்
தளம் பார்த்து தாமிவர்ந்து அமைத்த குடியேற்றம்
பலம் நிறையக்கராயன் கந்தபுரத்தொடு கண்ணகைபுரம்
பழங்களும் பாற்பசுக்களும் மேதிகளும் பெருகி நிற்கத்
தலங்கொண்ட கந்தபுரக் கந்தனேயாடீரூஞ்சல்
02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நெல்லும் செங்கரும்பும் தென்னைமரத் தோப்புக்களும்
கந்நற் காவுபாலும் கனிய சுவைத்தேனும் நெய்யும்
தேமாவும் தீம்பலாவும் தெவிட்டாப் பழம்பழுக்க
மன்னராமக்கராயனாண்ட பிரதேசமதில்
சொன்ன சிறப்போடு சோர்வற்றருள் சொரிய
அன்னவள் தேவயானியுமருள் வள்ளியும் சேர
அன்னையுமை மைந்தா ஆடீரூஞ்சல்
வண்ணமயில் வாகனனேயாடீரூஞ்சல்

**03**

அக்கராயன் வாவிதனிலலை மோதி நீர்நிறைய
பக்கமிரு வாய்க்கால்கள் பாய்ந்தோடி நீர்தரவே
தக்கபடி ஏர்கொண்டு தம் வயல்களுழுதுமே
செக்கச் செந்நெல்லும் சிறுபயிரும் தாம் செய்து
எக்காலமும் பஞ்சமற்றின்பமொடு வாழவும்
புக்ககங்கள் தோறும் பெருஞ்செல்வம் பெருகிவிட
மக்கள் மகிழ்ந்திருக்க வடிவேலா ஆடீரூஞ்சல்
சுக்கெனத்துயர் போக்கும் தூய வேலாவாடீரூஞ்சல்

**04**

மூத்தகணபதியான் முறுகண்டியில் வீற்றிருக்க
காத்தற் கடவுள் கண்ணபிரான் காத்துநிற்க
சத்திமா தேவியாம் சாமுண்டீஸ்வரியும்
இத்தியடியில் ஏற்றமாய் துயர்களைய
சித்திதரு கண்ணகையும் சீர்முத்துமாரியும்
நற்திகழ் அருள்மிக்க நாகதம்பிரானும் சேர
முத்திதரும் முருகவேலா மோகமுடனாடீரூஞ்சல்
பத்திரமாய் பீடத்தமர்ந்திருந்தாடீரூஞ்சல்

**05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலைகளிற் சிறுமந்தி துள்ளிவிளையாட
பாலைமரங்களில் பட்சிகள் பாட்டிசைக்க
மாலைமுகில் கறுக்க மயில்கள் மகிழ்ந்தாட
சாலைகளில் பசுக்கூட்டம் சாரியாய் நடந்துவர
வேழமொடு மான்களும் வனங்களில் விரைந்தோட
வாலைக்குமரிகள் மகிழ்கும்மி அடித்திடவும்
வேலா வேகமின்றி மெதுவாகவாடீரூஞ்சல்
பாலப் பழனியனே பக்குவமாயாடீரூஞ்சல்

06

வெற்றிவேல் கரமேந்தி வீரவதனத்தான்
பற்றிநின்ற தேவர்களின் பெருந்துயர் துடைக்கவே
சற்றேனும் சளைக்காது சூரனை வதைத்தவா
உற்ற துணைபுரிய ஊர்கந்தபுரப் பதியில்
செற்ற சிவமைந்தா செவ்வேளே ஐயா நீ
வற்றிய நீர்நிலைகள் வாய்க்கால்கள் வழிந்தோட
பற்றோடு மழைபொழியவாடீரூஞ்சல்
பாரெங்கும் குளிர்ச்சி பெறவாடீரூஞ்சல்

07

அந்தணர்கள் வேதமோத ஆடீரையா
சுந்தர வடிவேலா ஆடீரையா
மந்திரங்கள் செபித்திடுவோம் ஆடீரையா
பந்தங்கள் அறுத்திடவே யாடீரையா
பாமாலை சூடிடுவோமாடீரையா
நாமகள் கல்விதரவாடீரையா
பூமகள் பொழிந்திலங்கவாடீரையா
தாமரையிற் தோன்றியவா ஆடீரூஞ்சல்

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணித் திங்களின் அருபூர்வபட்சம்தன்னில்
தாவணிகள் கட்டி நங்கையர்கள் துதிபாட
கோமகனைத் தோள்மீது இளைஞர்கள் சுமந்துவர
பூமாலை சூடி பெரும்வீதி வலம்வரவுன்
நாமங்களைப் பக்தர் நயந்துமே பாடிவர
நாதங்களிசை பாட மேளங்கமொலித்துவிட
பாவங்கள் தீர்ப்பாயேயாடீரூஞ்சல்
நாவலர்கள் பாடிடவேயாடீரூஞ்சல் 09

சங்குமுழங்கிட பக்தர்கள் மகிழ்ந்துவிட
தங்கரத்தில் வேல்தாங்கி வினைகளறுத்துவிட
ஓங்கார மந்திரத்தை ஓதியே செபித்துவிட
ஆங்காரமான ஆணவமளிந்துவிட
சங்காரம் செய்து சூரனை வதைத்துவிட
ரீங்காரத்தோடு தேவர்கள் மலர்தூவிவிட
பாங்காகப் பாடவேயாடீரூஞ்சல்
அங்கணன் மைந்தா அழகுடனாடீரூஞ்சல் 10

**வாழி**

அந்தணர் அரும்வேதம் சிறக்க வாழி
அரசரின் ஆட்சி சிறந்திடவே வாழி
தரமாகப் புராணங்கள் சிறக்க வாழி
அறஞ்செய்யும் மார்வமுடையோர் வாழி
மந்திரமும் செந்தமிழும் சிறக்க வாழி
மாதம் மும்மாரி பொழியவாழி
நாத வடிவினனே சிறந்து வாழி
பாதம் தொழுதுடுவோம் பரமன்மகனே வாழி

**பராக்கு**

வேழவதனத்தான் தம்பியே பராக்கு
வேல்கொண்டு வினை தீர்ப்பவனே பராக்கு
சாலத் தொழுவோம் சஞ்சலம் தீர்ப்பாய் பராக்கு
கோலமயில் வாகனனே கும்பிடுவோம் பராக்கு
ஞாலத்திலமைதிவரவருள் புரிவாய் பராக்கு
சோலைகள் செழித்திட செவ்வேழே பராக்கு
காலமெலாம் துணைநிற்கும் கந்தா பராக்கு
சீலம்நிறை செஞ்சடையான் மைந்தா பராக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

சூரனுடலறச் சொர்க்கம் சேர்த்தவனே
சேவலுமயிலுமாய் வந்தவனையேற்றவனே
பாவங்கள் போக்கிய குமரனைப் போற்றுவோம்
நாமங்கள் நாமும் பாடுவோம் எச்சரிக்கை
பூமக்கள் உள்ளங்கள் புதுமகிழ்வு பொங்கவே
பாமாலை சூடித்தொழுதிடுவோம் எச்சரிக்கை
ஏமாற்றமின்றி எம்துயர் தீர்க்கவே
யாமெல்லாம் வாழ துணைநிற்பாய் எச்சரிக்கை

## லாலி

ஆதி லாலி சிவசோதி லாலி
எமையாதரிக்க வந்துதித்த கந்தலாலி
கந்தலாலி சிவமைந்தலாலி
தேவர்துயர் தீர்த்திடவேயுதித்த லாலி
பூதிலாலி அனுபூதிலாலி - சிவ
சுப்ரமணியமெனும் நாம லாலி - கலி
தீர்த்திடவே வந்துதித்த செல்வாலாலி
நேர்த்தியொடு நின்றெம்மை காப்பாய் லாலி

## மங்களம்

கந்தனுக்கு மங்களம் கதிர்வேலனுக்கு மங்களம்
சுந்தரவடிவேலனின் தேவியரே மங்களம்
அந்தரப்படுவோரை காத்திடுவாய் மங்களம் - ஸ்கந்தபுரம்
வந்துறைந்த வடிவேலா உந்தனுக்கு மங்களம்
ஐந்துகரன் தம்பியரே அறுமுகனே மங்களம்
பந்தவினை தீர்த்திடுவாய் பாலகனே மங்களம்
வெந்தநீறணிந்திடுவோம் வினைதீர்ப்பாய் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்

ஆக்கம் : கனகையா மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவூஞ்சற் பாடல்கள் வெளியீடு
## ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம் - ஸ்கந்தபுரம்

தூய செந்தமிழ் மொழி சிறந்திலங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பிரதேச செயலர் பிரிவுகளிலும் வாழ்ந்த விவசாயிகளில் ஏறக்குறைய 600 பேரைத் தேர்வு செய்து 1962ம் ஆண்டு அரச காணித் திணைக்களத்தினால் உருவாக்கப்பெற்ற அக்கராயன் குடியேற்றத்திட்டத்தின் கீழ் அமைந்துள்ள அக்கராயன்குளம், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களில் வாழ்ந்த மக்களாலும் அங்கு கடமை புரிந்த காணித் திணைக்களம் மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்களின் ஊக்கத்தோடும் உருவாக்கப்பெற்ற எமது முருகப்பெருமான் ஆலயமானது மிகச்சிறப்பும் அதி அற்புதம் வாய்ந்ததும் அருள் சொரிகின்றதுமாக நின்றிலங்குகின்றது.

அப்பன் கந்தவேழானவர் இவ்வளவில் சிறந்து விளங்குவதற்குக் காரணமான இப்பகுதியைச் சார்ந்த பழம்பெரும் குடியேற்ற வாசிகளை இவ்வேளையில் எண்ணி மதிப்பளித்துக் கொண்டு எனது கருத்தினைச் சமர்ப்பிக்க விளைகிறேன்.

என்னை விளம்பரப்படுத்துவதற்கு எனது புகைப்படத்தைப் பதிவு செய்து இப்புத்தகத்தைப் படைக்க எனக்கு விருப்பமில்லை. எமது அற்புதக் கடவுளாம் முருகனின் திருவூஞ்சற் பாடல்கள் மூலம் அவரைப் பாடவே விரும்புகின்றேன்.

இவ்வாலயத்திற்கென்று நிரந்தரமான ஊஞ்சற் பாடல்கள் இல்லாததினாலும் ஏற்கனவே எமது கிராமப் பெரியார் திரு.சோமசுந்தரம் ஆசிரியர் அவர்களால் கையெழுத்துப் பிரதியாக இருந்த ஊஞ்சற் பாடல்கள் மறைந்துவிட்டதாலும் கடந்த வருடத்தில் (2014) திருவிழாவின் போது அது ஆலயத்தின் பரிபாலன சபையினர் கோரியதற்கமைவாகவும் எனது சிறிய புலமைத்திறனைச் சேர்த்துக் கொண்டு எமது ஆலயத்தில் கந்தபுராணம், திருவாதபுராணம் ஆகியவற்றிக்குப் பயன் கூறும் திரு.ஆனந்தவாரியார், திரு.சி.பொன்னம்பலம் ஆகியோரின் ஆசியுடனும் அவர்களின் மேற்பார்வையுடனும் இப்பாடல்களை இயன்றவரை இயற்றி கடந்த வருடத் திருவிழாவின் போது பாடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல்களை புத்தக வடிவில் தரவேண்டும் என்று என்மனதில் பதிந்த காரணமானது, முருகப்பெருமானது அற்புதங்களாகும். கடந்த 2015 தை மாதம் எனக்கு ஏற்பட்ட வாகன விபத்தினால் மிகவும் பாதிப்புற்று சிகிச்சை பெற்றும் நான் தப்பிப் பிழைக்கமாட்டேன் என்றிருந்தவேளை, எமது அக்கராயன் குளம், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம் மக்களில் பெரிதளவிலானோர் என்மேற்கொண்ட பற்று, அனுதாபம் காரணமாக இந்த முருகப் பெருமானுக்கும் ஏனைய தெய்வங்களிற்கும் கிறிஸ்தவ ஆலயங்களில் சேர்த்து அபிசேக ஆராதனைகள் செய்தார்கள். இதனால் தான் நான் உயிர் பிழைத்தேன் என்பது உறுதி. இதனால் இத்திருவூஞ்சற் பாடல்களை நூல் உருவாக்கம் செய்து மிகப் பக்தியுடன் வெளியிடுகின்றேன். எனக்கு மட்டுமல்ல இவரைக் கைதொழுது வணங்குவோர் யாவருக்கும் முருகப்பெருமான் அருள்புரிந்து கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படையானது.


நிறைவாக, இத்தலத்திற் சிறு வயதிலிருந்து பூசைகள், ஆராதனைகள் விசுவாசத்தோடு செய்து வரும் எமது ஆலயத்தின் அந்தண சிவாச்சாரியார் திரு.பா.பாலச்சந்திரசர்மா அவர்களுக்கும், குடும்பத்திற்கும், ஆலய நிர்வாகத்தை திறம்பட செய்து வரும் ஆலய பரிபாலன சபையினருக்கும், இக்கோயிலில் அதிகமாக தேவாரம் பாடுகின்ற திரு.ப. பொன்னம்பலம் ஐயா, திரு.ச.கனகரத்தினம், திரு. ப. தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற மாரிமுத்து அப்பா அவர்கள், திரு. த. கிருஸ்ணபிள்ளை அவர்கள் மற்றும் ஏனையோருக்கும் யாவற்றிற்கும் மேலாக இத்திருத்தலத்தில் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகிய வற்றிக்கு பயன்கள் பல்லாண்டு காலம் உரைத்துவரும் பெரியார்களான திரு. ஆனந்தவாரியார், திரு. சி. பொன்னம்பலம் ஆகியோருக்கும் முன்னைநாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர்களான திரு. கந்தையா, திரு. க. இராசையா, சி. சின்னதம்பி, திரு. தம்பையா ஆகியோருக்கும் எனது மதிப்பையும் சிறப்பையும் மகிழ்வையும் தெரிவித்து இந்நூல் சிறக்க வேண்டி இறைவனைத் தொழுது நிறைவு செய்கின்றேன்.
நன்றி.

இவ்வண்ணம்
கனகையா மகேந்திரன்
ஓய்வு பெற்ற நிர்வாக அலுவலர் (கி.அ)
சமாதான நீதவான்
128, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org